பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council
187, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
187, ආඩියපාදම් පාර, තිරුනෙල්වේලි, යාපනය
187, Adiyapatham Road, Thirunelvely, Jaffna
Website: www.np.gov.lk e-mail: chiefsecnpc@gmail.com

எனது இல / මගේ අංකය / My No: NP/09/FRM/CIR/2013

திகதி / දිනය / Date: 31.07.2013

மாகாண நிதிச் சுற்று நிருப இல:- PF/06/2013

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

**வாகனத் தொகுதி காப்புறுதி, இலவச வாகன வருமான வரி அனுமதிப் பத்திரம்**

வடமாகாண சபைக்குச் சொந்தமான சகல வாகனங்களுக்குமான வாகனத்தொகுதி காப்புறுதி அனுமதிப் பத்திரங்களை (Fleet) இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அ. வாகனக் காப்புறுதி

i. தங்கள் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களின் அடிப்படையில் முதற்கட்ட வாகனங்களுக்கான வாகனத் தொகுதி காப்புறுதி அனுமதிப் பத்திரங்கள் (Fleet) 2013.08.01ம் திகதி முதல் வழங்கப்படவுள்ளன.

ii. மேற்குறித்த திகதியின் பின்னர் அமைச்சுக்கள், திணைக்களங்கள் தமது வாகனங்களுக்கான காப்புறுதிகளை நேரடியாகப் பெற்றுக்கொள்வதை நிறுத்திக் காப்புறுதி செய்யவேண்டிய வாகன விபரங்களை உரிய காலத்தில் வட மாகாண மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதனூடாக வாகனத் தொகுதி காப்புறுதி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

iii. தற்போது நடைமுறையில் உள்ள தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினூடாக (NITF) காப்புறுதியைப் பெற்றுக்கொண்ட அமைச்சுக்கள், திணைக்களங்களும் வடமாகாண மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தினூடாக வாகனத் தொகுதி காப்புறுதி அனுமதிப் பத்திரங்களைப் (Fleet cover) பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

iv. அதேவேளை தங்கள் அமைச்சுக்கள், திணைக்களங்களில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களது பாவனையில் வடமாகாணசபைக்குரிய வாகனங்கள் இருப்பின் அவற்றின் காப்புறுதி முடிவுக்காலத்தின் பின் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கீழ் வழங்கப்படவுள்ள வாகனத் தொகுதி காப்புறுதி அனுமதிப்பத்திர முறைமைக்குட்படுத்த வேண்டுமென (Fleet) கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

v. மேலும், 2013.08.01 இலிருந்து வடமாகாண சபைக்குரிய சகல வாகனங்களும் வாகனத் தொகுதி காப்புறுதி அனுமதிப் பத்திரங்களைப் (Fleet) பெற்றிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். இக்காலப் பகுதிக்குப் பின்னர் தங்களால் காப்புறுதிகள் நேரடியாகப் பெற்றுக்கொள்ளப்படுவது தடை செய்யப்படுகிறது என்பதை தங்கள் கீழுள்ள பிராந்திய அலுவலகங்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களிற்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஆ. இலவச வாகன வருமான வரிஅனுமதிப் பத்திரம்

மேற்குறித்தவாறான வாகனத் தொகுதி காப்புறுதி முறைமைக்குள் வாகன காப்புறுதிகள் வழங்கப்படும் வாகனங்களுக்கான இலவச வாகன வருமான வரி அனுமதிப்பத்திரத்தினை மாகாண மோட்டார் வாகனப் போக்குவரத்துத்திணைக்களத்தினூடாக வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே 2013.08.01 இலிருந்து மேற்படி இலவச வாகன வருமான வரி அனுமதிப்பத்திரமும் வழங்கப்படவுள்ளதால் வாகனக் காப்புறுதி மற்றும் இலவச வாகன வருமான வரி அனுமதிப் பத்திரம் இக்காலப் பகுதியிலிருந்தே கணிக்கப்படும். இவற்றை வழங்குவதற்கு மாகாண மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு தங்களது

- வாகனத்தின் பதிவுப் புத்தகத்தின் பிரதி
- தற்போதைய காப்புறுதிப் பத்திரம், அதன் பிரதி
- தற்போதைய வாகன வருமான வரி அனுமதிப்பத்திம், அதன் பிரதி போன்றவற்றை ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்

இவ் விடயம் தொடர்பான மேலதிக விபரங்களை வட மாகாண மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் அவர்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும்.

இ.பத்மநாதன்
பிரதிப் பிரதம செயலாளர்- நிதி

ஒப்பம்:-
ர.விஜயலட்சுமி
பிரதம செயலாளர்

பிரதிகள்:-

1. கௌரவ ஆளுநரின் செயலாளர் - வ.மா
2. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா
3. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் – வ.மா

} தகவலுக்காக